# யுத்தம் முடியும்வரையும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவ இலங்கை அரசுக்கு பலநாடுகள் மறுப்புத்தெரிவித்துள்ளன

வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம் பெறும் யுத்தம் முடியும் வரை நாட்டின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு தேவையான நிதி உதவிகளை வழங்க பல நாடுகள் மறுப்புத் தெரிவித்துள்ளதாக புனர்வாழ்வு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி தெரிவித்தார். மேற்கு ஐரோப்பிய நாடுகள் உட்பட எட்டு நாடுகள் இதன்படி உதவி வழங்க முடியாது என இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளன. யுத்தம் முடிந்து சமூக நிலை ஏற்படின் சீரழிவான பொருளாதாரத்தைச் சீர் படுத்தவும், சேதமுற்ற ஆதனங்கள் கட்டிடங்கள், வீதிகள் என்பவற்றை திருத்தியமைக்க சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. வடக்கு, கிழக்கு யுத்தம் காரணமாகவும், தெற்கில் ஜே. வி. பியின் வன்முறைகள் காரணமாகவும் நாடு முழுவதும் 1000 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். இதே சமயம் நாட்டில் உள்ள பதினொரு லட்சம் அகதிகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் தொடர்ந்தும் உதவி வழங்குகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4.50

# முரசொலி

முரசு 05 ஒலி 30 பிரமோதூத மார்கழி 12 (27-12-1990) வியாழன்

## ஆறுமாதமாக மரவள்ளி உண்ட கர்ப்பிணி மூளாய் ஆஸ்பத்திரியில் அனுமதி!

ஆறுமாதகாலமாக மரவள்ளிக்கிழங்கை மட்டுமே உண்டு வாழ்ந்த கர்ப்பிணிப் பெண்மணி ஒருவர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டு மூளாயிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த இப்பெண்மணி அங்கு ஏற்பட்ட கலவரம் காரணமாக உயிரைக் காக்கும் நோக்குடன் காடுகளுக்கு புகலிடம் தேடி ஓடி அங்கு வாழ்ந்ததாகவும் அங்கே போதிய உணவு கிடைக்காமல் ஆறு மாதகாலமாக மரவள்ளிக்கிழங்கை மட்டுமே அவித்து உண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது காடுகளில் அலைந்து திரியும் கிழக்கு வாழ் அகதிகள் பெரும்பாலும் மரவள்ளி மற்றும் காட்டில் உள்ள காய்வகைகளையே தம் பிரதான உணவாக உண்டு காலம் கழிப்பதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.(74)

# ஐ. தே. க. அமைச்சரவையில் மாற்றம்

# சில பெரிய தலைகள் உருளும்

### "வேலை செய்யுங்கள் அல்லது வெளியேறுங்கள்"

எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் ஏற்றடலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸ அமைச்சர்களின் பணிகளை மதிப்பிடதாம் புதிய வழி வகைகளைக் கையாளவிருப்பதாகவும் அறிவித்ததை இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

திறமையாகப்பணிபாற்றிய அமைச்சர்களுக்கு மேலதிகப் பொறுப்புக்கள் கிடைக்கலாம் எனவும் நன்கு செயற்படாத அமைச்சர்களின் பதவிகள் பறிபோகலாம் எனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கப்பலிலிருந்து இறக்கும் வேலை கடல் கொந்தளிப்பால் தாமதம்

சீரற்ற கால நிலையாலும் கடற் கொந்தளிப்பாலும் பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் வேலைகள் தாமதமடைகின்றன.

இழுவைப் படகுகளில் இறக்கப்படும் பொருட்கள் படகுடன் கடல் அலையினால் அங்குமிங்கும் இழுத்துச் செல்லப்படுவதால் இப்பொருட்களை பல சிரமங்களின் மத்தியிலேயே கரைக்குக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மா, பெற்றோல் விலை குறைப்பு

கோதுமை மாவின் விலை நேற்று முதல் ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. ரூபா 13 45ல் இருந்து ரூபா 12 45 ஆக விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது. பெற்றோலும் லீற்றர் 35 ரூபாவில் இருந்து 30 ரூபாவாகவும் டீசல் 13 ரூபாவில் இருந்து 11 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

### இனரீதியான நடவடிக்கையை சுட்டிக்காட்டியதால்

# இரு தமிழ் அதிகாரிகளை சர்வோதயம் பதவி நீக்கியது!

சர்வோதய ஸ்தாபனத்தின் இரு தமிழ் நிவாரண புனர்வாழ்வுப் பணிப்பாளர்களை சர்வோதயத் தலைமை ரீதியான பாகுபாட்டு நடவடிக்கைகள், கணக்கு ஊழல்கள் போன்றவற்றை நிறுவனங்களுக்கு எடுத்துக்கூறிய செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் திருகோணமலை

## கொழும்பில் முதலீடு செய்ய கொரிய நிறுவனங்கள் மறுப்பு

இலங்கையில் ஸ்திரமற்ற பொருளாதார நிலை காணப்படுவதால் சுதந்திரவர்த்தக வலையத்தில் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் மீள கைஎழுத்திட ஏழு தென் கொரிய நிறுவனங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன.

இந்நிறுவனங்களை மீளமுதலீடு செய்வதை ஊக்குவிப்பது தொடர்பாக கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் நகரத்தில் இரு மணி நேரம் மின்சாரம்

மன்னார் நகரில் மாலை 6 30 மணியிலிருந்து இரவு 8 30 மணிவரை மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பகலிலும் சில சமயம் ஒரு மணி நேரம் மின்சாரம் கிடைப்பதாகவும் தெரியவந்துள்ளது. (33)

## பாராளுமன்றத்தில் வைத்து

சர்வோதய ஸ்தாபனத்தின் இரு தமிழ் நிவாரண புனர்வாழ்வுப் பணிப்பாளர்களை சர்வோதயத் தலைமையகம் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் சர்வோதய ஸ்தாபனத்தின் இன ரீதியான பாகுபாட்டு நடவடிக்கைகள், கணக்கு ஊழல்கள் போன்றவற்றை நிறுவனங்களுக்கு எடுத்துக்கூறியமைக்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டனராம்.

இதனால் சர்வோதயத்திற்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் சர்வோதயத்தின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் திருகோணமலையில் சர்வோதயத்தினால் கட்டப்பட்ட 49 வீடுகளில் ஒரு சிலவே தமிழருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து நிதிவழங்கும்

—4 ஆம் பக்கம் பார்க்க

8.30 மணிவரை மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இங்குள்ள மின்சாரசபை ஜெனரேற்றருக்கு டீசல் வழங்கப்பட்டு இந்த நடைமுறை அமுல் செய்து வரப்படுகிறது.

கிடைப்பதாகவும் தெரியவந்துள்ளது. (33)

கொண்டு வருவதாக தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தில் வைத்து அஷ்ரப் - காதர் வாக்குவாதம்

பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சி கண்டி மாவட்ட எம் பி. ஏ. ஆர். எம். ஏ. காதருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது

முஸ்லிம்களின் தலைவரென அஷ்ரப் எண்ணுகிறார். முஸ்லிம்களுக்கு தலைமை தாங்க அவர் தகுதியற்றவர் என்று காதர் தாக்கிப் பேசினார்.

றோ, கசாப்புக்கடை, கொலைகாரர்கள் என்ற சொற் பிரயோகங்களும் சபையில் நிகழ்ந்தன. (33)

### பிரதமர் சந்திரசேகர் சொல்கிறார்

## இந்திய மக்கள் மீதே எமக்கு அக்கறை விடுதலைப் புலிகள் மீதல்ல!

''தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றி மத்திய அரசு தனக்கென்று ஒரு கருத்தைக் கொண்டுள்ளது'' என்று பிரதமர் திரு. சந்திரசேகர் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

''இவர்களின் நடமாட்டம் போக்கு குறித்து மத்திய அரசு நிறுவனங்களின் மூலம் தகவல்கள் கிடைத்து வருகின்றன'' என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் நமது நாட்டுக்குப் பிரச்சினைகளை உருவாக்கும் எதனையும் செய்யக் கூடாது என்று குறிப்பிட்ட பிரதமர் ''நமது நாடு, நமது மக்கள் ஆகியவற்றின் மீதே அரசுக்கு அக்கறையே

—04 ஆம் பக்கம் பார்க்க

### மாலைதீவு ஜனாதிபதி தகவல்

## சார்க் மாநாட்டைக் குழப்ப சதி நடந்தது!

சில வாரங்களிற்கு முன்னர் மாலைதீவில் நடந்த சார்க் மாநாட்டைக் குழப்ப சதி முயற்சி நடத்தப்பட்டிருந்ததாக மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் இப்போது அறிவித்துள்ளார்.

மாநாட்டு மண்டபத்தை வெடி குண்டுகளால் தகர்க்க

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மணலாறில் பலியான அதிகாரி குடியேற்றத் திட்ட முகாமையாளர்!

மணலாறு மாவட்டத்தில் கடந்த 22-ம் திகதி காலை விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட படை அதிகாரி தொண்டர்படை கப்டன் அபேரட்ன பண்டா புசல்ல என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரே மணலாறு மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றத் திட்டத்தின் உதவி முகாமை

—04 ஆம் பக்கம் பார்க்க

### பூந்தோட்டத்தில் ராணுவம்

## மிதிவெடியை பரீட்சிக்க அதன் மேலாக செல்லுமாறு உத்தரவு

நேற்று முன்தினம் வவுனியாப் பூந்தோட்டம் பகுதியில் மிதி வெடியில் சிக்கிப் படுகாயமுற்ற ஆறு பேர் தற்பொழுது அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனம் மூலம் இப் பிரயாணிகள் அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டனர்

புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளை பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே

—04 ஆம் பக்கம் பார்க்க

### மாலைதீவு சதிப்புரட்சி

## 33 புளொட் உறுப்பினர் மீது இலங்கையில் வழக்கு விசாரணை

மாலைதீவில் ஒரு சதிப் புரட்சி நடாத்த முயன்று தோல்வியடைந்த முப்பத்தி மூன்று புளொட் இயக்க உறுப்பினர்கள் மீது இலங்கையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

போற்றி அருளுக - 5

# ஒரு பொல்லாப்பும் இல்லை



அண்ணாமலையைச் சேர்ந்த ஏலக்குழலி பெருமைக்காரி மனோன்மணியும் வாட்கண்ணியும் நேரிழையும் முத்துநகையும் நித்திலமும் அவளுடைய தோழிப்பெண்கள், இவர்கள் யாவருமே கன்னியர்கள். மார்கழிநீர் ஆடும் பொருட்டுப் பூமணம் நிரம்பியதாமரைப் பொய்கைக்குப்புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அது கடுங்குளிர் செறிந்த காலை வேளை. ஏலக்குழலி இன்னும் நித்திரை விட்டு எழும்பவில்லை மலர்மஞ்சத் திலேபடுத்துக் கிடக்கிறாள்.

கேலகலப்பாகப் பேசிஅரட்டை அடித்துக்கொண்டு வந்த தாழியரின் வம்புப் பேச்சொலியும் ஏலக் குழலியின் உறக்கத்தைஅசைக்க முடியவில்லை. இவளது தூக்கத்துக்கு முடிவுசெட்ட வேண்டும் என்ற துணிவு—தோழிமாருக்கு வேளைக்கேவிழித்தால்தானே, விரைவாகத் தமது நீர்விளையாட்டைத் தொடங்கலாம்! அதனால் அவர்கள் பேரோசை எழுப்பிப் பாடுகிறார்கள். இந்த ஓசை கேட்டாவது ஏலக்குழலி கண் விழிக்கட்டுமே என்பதுதான் நோக்கம்.

"முன்னைப் பழம்பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே,
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரான் ஆகப்
பெற்ற உன் சீரடியோம்
உன் அடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்.
அன்னவரே எம் கணவர்
ஆவார்.
அவர் உகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணி புரிவோம்
இன்ன பரிசே
எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும்
இலோம் ஏலோர் எம்பாவாய்"

"சுவாமீ, நீ மிகவும் பழமையானவன், எப்பொழுது தோன்றினாய் என்று கேட்பதே கருத்தில்லாத கேள்வி. மிகவும் பழையதென்று ஒரு பொருள் இருக்குமானால், அந்தப் பழம்பொருளைவிடப் பழையவன் நீ. உனக்குத் தொடக்கம் இல்லை. நீ அநாதி. அது மட்டுமா? நீ புதுமைக்கும் புதுமையாய் விளங்குகிறாய். இனிமேல் வரப்போகின்ற புதுமைகள் அனைத்தையும் விட நீ புதுமையானவன். பின்னைப் புதுமைகளைப் பிறப்பித்துக் கொண்டு இருப்பவனே நீதானே! உனக்கு முடிவில்லை; நீ அநந்தம். நீ ஆதியும் அந்தமும் இல்லாதவன்; அடியும் முடியும் இல்லாது நெடிது நிலைத்து நிற்பவன்; நீ நித்தியன்.

"அப்படிப்பட்ட உன்னைப் பிரானாக நாங்கள் பெற்றிருக்கிறோம். எவ்வளவு பாக்கியசாலிகள் - நாங்கள். உன் அடியார்களின் திருவடிகளை நாம் வணங்குகிறோம்; அவர்கள் மீது பட்சம் உடையவர்கள் - நாங்கள். அந்த அடியார்களே எங்களுக்குக் கணவர்கள் ஆவார்கள்; ஆகவேண்டும். அவர்கள் மன விருப்புடன் இட்ட கட்டளைகளைப் பணிவுடன் நிறைவேற்றுவோம். கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை என்

# பிரிட்டனுக்குச் செல்வோர் தொகை அதிகரிப்பு

# போலி பாஸ்போட்டுடன் 700 பேர் கைது!

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்குச் செல்வோரின் தொகை மீண்டும் அதிகரித்துள்ளமை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயப் பதிவேடுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும் பிரிட்டனுக்குச் செல்லவென 1,200 - க்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு உயர் ஸ்தானிகராலயம் விசா வழங்கியுள்ளது.

இதுதவிர பிரிட்டனுக்குள் அனேகமான இலங்கையர்கள் போலி பாஸ்போட், தஸ்தாவேஜுக்கள் என்பவற்றைச் சமர்ப்பித்து சமீபகாலமாகப் பெருமளவில் சென்றுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் உயர் ஸ்தானிகராலய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆகஸ்ட் - அக்டோபர் மாதங்களில் மட்டும் 700 இலங்கையர்கள் போலி தஸ்தாவேஜுக்களைச் சமர்ப்பித்து பிரிட்டனுக்குள் புக முயல்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இளைஞர்களுடன் பெருமளவு வயோதிபர்களும் அடங்குவர் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## நஷ்டஈடு தேவையானால்....

### சவப்பெட்டியின்மேல் புதிய வாசகம்

வடக்குக்—கிழக்குப் பகுதிகளில் புலிகளின் தாக்குதல்களால் மரணமடையும் இராணுவத்தினரின் சவப் பெட்டிகளின் மேற்பகுதிகளில் விசேட எழுத்துக்கள் பொறிக்கப்பட்டே அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவதாகக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"இச்சம்பவம் காரணமாக யாராவது கலவரத்தில் ஈடுபட்டால் இறந்த இவருக்குரிய நஷ்டஈடு வழங்கப்படமாட்டாது" என்ற வாசகம் சவப்பெட்டிகளில் மேல் பொறிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (43)

## ஆழ்கடல் மீனவர்களுக்கு கடற்படையால் தொல்லை!

காரைநகர் கடற் பிராந்தியத்தில் கடற்படையினர் செய்யும் கெடுபிடிகளினால் அப்பகுதியில் தொழில் புரியும் மீனவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தொல்புரம், சுழிபுரம் நெல்லியான், மூளாய். பொன்னாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் இதனால் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதில்லை எனவும்பொன்னாலை போன்ற பிடிபாடு குறைந்த இடங்களிலேயே தற்போது மீன் பிடிப்பதாகவும் இதனால் அன்றாட வாழ்க்கையை ஓட்டுவது கஷ்டமாக வுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆழ்கடலில் மீன் பிடித்தால் பிடித்த மீன்களையும் கடற்படையினர் பறிமுதல் செய்கின்றனராம். (ப 1)

## பதவி உயர்வுப் பரீட்சைகள்

பொது எழுதுநர் II-ம் வகுப்பின் "அ" பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை அரசாங்க சேவை அதிகார சபையின் அங்கீகாரத்தின் டி 1991ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆம் திகதியில் பரீட்சை ஆணையாளரால் கொழும்பு, கண்டி, காலி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில்நடாத்தப்படவிருக்கிறது

விண்ணப்பங்கள் அனைத்தும் பரீட்சை ஆணையாளர், மலே வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்பட வேண்டும். ★ ★ (18)

அஞ்சல் தொலைதொடர்பு அமைச்சினதும், அஞ்சல் திணைக்களத்தினதும சிறு பணியாளர்களையும், ஆண் உப அஞ்சல் அதிபர்களையும், அஞ்சலதிபர்கள், தந்தியாளர்கள சேவைக்குத் தேர்ந்தெடுப்பதற்கான (விசேட) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் 1991ஆம் ஆண்டுமார்ச்மாதம் இருபத்திமூன்றாம் திகதி பரீட்சை ஆணையாளரினால் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களில் நடாத்தப் படவிருக்கிறது.

வடமாகாண ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

## பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி - அரசு தமிழ்மக்களைப் பட்டினிச்சாவுக்கு இட்டுச்செல்கிறது

"உச்சக்கட்டமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தான் யுத்தம் செய்கின்றோம் - ஆனால் அது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல எனக் கூறிக் கொண்டு ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்வதிலும், கோடிக்கணக்கான தனியார், பொதுச் சொத்துக்களை அழிப்பதிலும் அரசு முனைப்பாக ஈடுபட்டுள்ளது."

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யுத்த நடவடிக்கைகள் காரணமாக வட, கிழக்கு மாகாணங்களில் 6 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக்கப்பட்டும், ஒன்றரை லட்சம் மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டும் தமிழ் மாணவர்களின் கல்வி கடந்த 6 மாதங்களாகச் சீரழிக்கப்பட்டும் வந்துள்ளது.

தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ வசதிகளை மறைமுகமாகப் புறக்கணிப்பதிலும் மருந்துப் பொருட்களைத் தடை செய்வதிலும் அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் உத்தியோகப்பற்றற்ற பொருளாதாரத் தடையையும் ஏற்படுத்தி தமிழ்மக்களைச் சொல்லொணாத் துயரங்கட்கும், பட்டினிச் சாவுக்கும் இவ் அரசு இட்டுச் செல்கின்றது.

எனவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (74)

## வாழைநார் அலங்கார உற்பத்தி வெற்றிபெற்றோர் விபரம்

யாழ் செஞ்சிலுவைச்சங்கத்தின் அனுசரணையுடன் நல்லூர் முருகன் சனசமூக நிலையம் வாழைநார் அலங்காரப் பொருட்கள் உற்பத்திப் போட்டியொன்றை அண்மையில் நடாத்தியது. வாழைநார் உற்பத்திப் பயிற்சி பெற்ற 20 இளம் பெண்கள் இப் போட்டியில் பங்குபற்றினர்.

இப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் அறிவிக்... உமாதினி தியாகராஜா, செல்வி சிவமலர் இராசலிங்கம், செல்வி பிரதீபா ஜெகநாதன்

(ஆகக் கூடியதும்பு எடுத்துப் பல பொருட்கள் செய்தமை) செல்வி ஸ்ரீநாகேஸ்வரி தம்பிப்பிள்ளை, செல்வி யசோதினி நாகரத்தினம், செல்வி நிரஞ்சலா செல்வராஜா.

(ரீ. வி. விரிப்புத்தி றமை)

## தென்மராட்சியில் கொடுப்பனவுகள்

ஆவார்கள்; ஆகவேண்டும். அவர்கள் மன விருப்புடன் இட்ட கட்டளைகளைப் பணிவுடன் நிறைவேற்றுவோம். கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை என்பார்கள். நாங்கள் கற்புடைய மனைவியர்களாக — காதல் துணைவியர்களாக இருப்போம்.

''சுவாமி, கடவுளே! இப்படி எல்லாம் எமக்கு நீ அருள் புரியவேண்டும். அருள் புரிவாயானால் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை; ஒரு பொல்லாப்பும் இல்லை.''

பாவையரின் இதயத் துடிப்புகள் பாட்டு வடிவம் பெற்றுத் தேனிசையாகிக் காற்றோடு கலக்கின்றன. 'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே' என்று தொடங்கிய ஓசை ஏலக்குழலியின் ஆழ்ந்த உறக்கத்தையும் அசைத்து விடுகிறது. அவள் கண்ணைக் கசக்கியபடி தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து கொள்கிறாள். தோழிமார் அவளை உற்சாகமாக வரவேற்கிறார்கள்.

## வரவேற்பு

''அப்பாடா! வந்தாயா கடைசியில்? வா, வா''
ஏலக்குழலியும் இவர்களுடன் சேர்ந்து கொள்கிறாள்,.
''இன்னும் யார் யார் அப்பா வரவேண்டும்?''
''மானினேர்விழி, அன்னம், மங்கையர்க்கரசி ...''

மானினேர்விழியின் வீட்டை நோக்கி எல்லாரும் போகிறார்கள். அவளைப்பற்றிய கருத்துரைகள் கன்னிப் பெண்களிடையே அடிபடுகின்றன. மானினேர்விழி விசித்திரமானவள் என்பது வாட்கண்ணியின் கருத்து. முத்துநகையும் அதை ஒத்துக்சொல்லுகிறாள்.

- 'சித்தமழகியான்'

20 இளம் பெண்கள் இப் போட்டியில் பங்குபற்றினர்.

இப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

ஐந்து உற்பத்திப் பொருட்களிலான திறமை செல்வி யசோதினி நாகரத்தினம், செல்வி நிரஞ்சலா செல்வராஜா.

(ரீ. வி. விரிப்புத்திறமை) செல்வி தெய்வமலர் பரமகுருசாமி, செல்வி சிவரஞ்சினி சிதம்பரநாதன், செல்வி பிரேமிளா தேவநாயகம். (36)

## வேலையிழந்தோர் தொகை அதிகரிப்பு

## 10 வெற்றிடத்திற்கு 5௦0 பேர் விண்ணப்பம்

யாழ் குடாநாட்டில் தற்பொழுது வேலை இல்லாதோரின் தொகை பெருமளவு அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சாதாரணமாக நாட்கூலி வேலைக்கு கோரப்படும் விண்ணப்பங்களுக்குக்கூட பெருமளவு மக்கள் விண்ணப்பம் செய்வதை அவதானிக்க முடிவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கிளிநொச்சியில் இயங்கும் விவசாயபீடப் பண்ணைக்கு 10 பேரை தற்காலிகமாக நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இப்பதவிக்கு சுமார் 500 பேர் விண்ணப்பம் செய்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலையிலும், காரைநகர் சீநோர் தொழிற்சாலையிலும், நாவற்குழி அன்றீஸ் தொழிற்சாலையிலும் பணிபுரிந்த ஊழியர்களே இப் பதவிக்கு அதிகம் விண்ணப்பம் செய்ததாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைய இராணுவ நடவடிக்கையினால் இந்நிறுவனங்கள்இயங்காததால் நிறுவன ஊழியர்கள் வேலை இழந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. (70)

## தென்மராட்சியில் கொடுப்பனவுகள் தாமதம்

தென்மராட்சி கோட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர் பலருக்குப் பல கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இடருதவி நிதி இம்மாதத்துடன் முற்றுப்பெற்றாலும் பல ஆசிரியர்கள் இப் பகுதியில் இன்னும் இந்நிதியைப் பெறவில்லை.

1989-ம் ஆண்டு நடுப்பகுதியில் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து இடமாற்றம் பெற்றவருக்கும் இந்நிதி வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

1988-ம் ஆண்டு சேவைக்கால பயிற்சியைப் பெற்ற பலருக்கு சேவைக்காலக் கொடுப்பனவுகள் கூட இதுவரை இப் பகுதியில் வழங்கப்படவில்லை. இக்கொடுப்பனவுகள் யாவும் மருதனாமடம் வடமராட்சி போன்ற கோட்டங்களில் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ப 26)

புரம், பதுளை, கொழும்பு, காலி, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களில் நடாத்தப் படவிருக்கிறது. (18)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12167

### விற்பனைக்கு

மீண்டும் பழைய இடத்தில எமது நிறுவனம் இயங்குகின்றது. புதுவருட. நத்தார் பண்டிகைகளையொட்டி விசேட மலிவு விற்பனையும நடைபெறுகிறது லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர், 249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 12175

# ஈரோஸ் உறுப்பினர் ஒதுக்கியதை திறைசேரி நிறுத்தி வைக்கிறது!

ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களால் திருகோணமலையிலுள்ள பாடசாலைகளுக்கும் ஏனைய சமூக அபிவிருத்திக்குமென ஒதுக்கப்பட்டிருந்த நிதியைத் திறைசேரி நிறுத்தி வைத்துளளதாம்.

இது குறித்து ஈரோஸ் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

ஈராஸ் எம்.பீக்கள் பதவி இழப்புக்கு முன்னர் தமது தொகுதிகளுக்கு என அறிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட பணத்தை இவர்கள் மேற்படி அபிவிருத்தி வேலைகளுக்கென வழங்கியிருந்தமை குறிப்பித்தககது (38)

4 - வது ஆசிய கிரிக்கெட் போட்டி

## பங்களாதேஷ் இந்திய அணியிடம் தோல்வி

நான்காவது ஆசிய கிரிக்கெட் போட்டித் தொடரில் முதலாவது போட்டி இந்தியாவிற்கும் பங்களாதேஷுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சண்டிகாவில் இடம் பெற்றபொழுது இந்தியா 9 விக்கற்றுகளால் வெற்றி பெற்றது.

பூவா தலையா பார்த்ததில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக்களததில் இறங்கியது. அதன் துடுப்பாட்டத்தில் 50 ஓவர்களில் 6 விக்கற்றுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வீரன் 'பாருக்' பெற்றுக் கொடுத்த ஓட்டங்கள் 77 ஆகும்.

அதனைத் தொடர்ந்து துடுபபெடுத்தாடிய இந்திய அணி 36 5 ஓவர்களில் ஒரு விக்கற்றை மாத்திரம் பறிகொடுத்து வெற்றி இலக்கான 171 ஓட்டங்களை மிகவும் சுலபமாகப் பெற்றுக் கொண்டது.

'மான் ஒவ் த மாச்' ஆக இந்திய அணி ஆரம்ப துடுப்பாட்டக்காரர் வீரன் சித்து தெரிவு செய்யப்பட்டார். இவர் 110 பந்துகளைச் சந்தித்து 104 ஓட்டங்களை, ஆட்டம் இழக்காமல் பெற்றார். இதில் 10 நான்குகளும் 3 ஆறுகளும் அடங்கும்.

இபபோட்டித் தொடரின் அடுத்த பந்தயம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்திய- இலங்கை அணிகளுக் கிடையில் நடைபெறும். (16)

## மார்கழியில் காய்க்கும் அதிசயப் பனைமரம்

நன்றாகப் பேணி வளர்க்கப்பட்ட பனைமரமொன்று காலம் மாறியும் காய்த்திருக்கிறது.

விதை நாட்டப்பட்டு 14 வருடத்தில் அதிலிருந்து பயன் பெறப்பட்டுள்ளது.

நன்றாகச் செழித்து வளர்ந்து அதிகளவு காய்களுடன் காணப்படும் இந்தப் பனை மரத்தை அதனை வளர்ப்பவர் இயற்கை உரமிட்டு நன்கு பேணி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரணமாகப் பனை மாசி, பங்குனி மாதங்களிலேயே காய்க்கும். எனினும் இந்தப் பனை கார்த்திகை, மார்கழியிலும் காய்த்திருப்பது அதிசயமாகவுள்ளது.

வண்ணார்பண்ணையிலுள்ள தொழிலகமொன்றில் இந்தப் பனை வளர்க்கப்பட்டுவருகின்றது, (32)

## மாங்குளம் வாசிகள் இருவர் வவுனியாவில் வெட்டிக் கொலை!

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த லொறியில் சென்ற சாரதியும் வேறொருவரும் வவுனியா இராணுவத் தடை முகாமில் இறக்கப்பட்டு வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக இராணுவத்திடமிருந்து தப்பி வந்த லொறிக் கிளீனர் தெரிவித்தார்.

லொறிச் சாரதி முகமாலை இந்திராபுரத்தைச் சேர்ந்த சி வேலுச்சாமி (60) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

கொலை செய்யப்பட்ட இருவரும் மாங்குளம் அடையாள அட்டை வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது (ப 3)

### ஆங்கில கற்கைநெறி மீள்பரீட்சை

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் உயர் தொழில் ஆங்கிலக் கற்கை நெறிக்கான கல்வியாண்டு பெப்ரவரி மாதத்தோடு முடிவடைவதால் இம்மாதம் 29 ஆம், 30ஆம் திகதிகளில் 4-வது மீள்பரீட்சைகள நடைபெற உள்ளது ;என அறிவிக்கப்பட்டுள்ளது. 'அடுத்த 5-வது, 6-வது பரீட்சைகள பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ப-7)

### காங்கேசன் காசோலை

காங்கேசன்சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் டிசம்பர் மாத சம்பளத்திற்

## மன்னார்ச் செய்திகள்

### சனத்தொகை குறைகிறது

மன்னார்த்தீவில் தற்போது சுமார் நாலாயிரம் மக்கள் மட்டுமே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்டது மன்னார்த்தீவு பெருமளவு மக்கள் அகதிகளாக இந்தியாவிற்குச் சென்று விட்டனர்.

### மீன் விலை மிக மலிவு

மன்னார்த்தீவில் மீன் மிக மலிவான விலையில் விற்கப்படுகிறது சனத்தொகை குறைவு, பெருமளவில் மீன் பிடிக்கப்படுதல் ஆகியன காரணமாகவே மீனின் விலையில்

### சிலாவத்துறைக்கு புதிய நியமனம்

மன்னார் சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபராக ஜே. பெஞ்சமின் நியமனம் பெற்றுள்ளார். இவர் மன்னார்க் கச்சேரியில் உள்ளகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### மேலதிக அரச அதிபராக குருஸ் நியமனம்

மன்னார்க் கச்சேரி தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராகக் கடமை

சோவியத் ரஷ்யாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றிய ஒரு விமரிசன நோக்கு:

## எழ மறுக்கும் கிருதயுகம்

### சந்தைப் பொருளாதார கோஷம்

சோவியத் ஒன்றியத்தில் நடைமுறையிலுள்ள பொருளாதார அமைப்பானது சமதர்ம அமைப்பாகும். இலக்கண விதிப்படி கூறினால் இந்தப் பொருளாதாரத்தில், ''தேவைக்கேற்ற பகிர்வும் திறமைக்கேற்ற உழைப்பும்'' ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கும். தனியார் லாபம் என்பது கிடையாது. உழைப்புச்சுரண்டல் என்பது இருக்கக் கூடாது. அத்தகைய ஒரு பொருளாதார முறைமை நிறுவப்படுவதற்கான முயற்சிகள் லெனினின் ''புதிய பொருளாதாரக் கொள்கை''க் காலம் முதல் எடுக்கப்பட்டு வந்துள்ளன.

ஆனால் கடந்த இரண்டொரு வருடங்களாக அங்கு சந்தைப்பொருளாதார (Market Economy) வரவேண்டுமென்ற கோஷம் வலுத்துள்ளது.

''சந்தைப் பொருளாதாரம் என்பது யாது? அதன் பிரதான அமிசங்கள் யாவை? அது சோஷலிஸப் பொருளாதார அமைப்புடன் இணைந்து போகத் தக்கதா?

சந்தைப் பொருளாதாரம் என்பது பின்வருமாறு விளக்கப்படும்.

''தனியார் சொத்துரிமை, தொழில் முனைப்புச் சுதந்திரம், லாபநோக்கு, போட்டி ஆகியனவற்றைத் தூண்களாகக் கொண்டதும்; அமெரிக்கா போன்ற நாடுகளின் தேசிய பொருளாதார அமைப்புக்களின் திறவுகோல் நிறுவனமாக அமைவதும் சந்தையாகும்'' என்று பாடப் புத்தக வரைவிலக்கணம் சொல்லும்.

இந்தச் சந்தைப் பொருளாதாரத்தின் உள்ளீடுகள் யாவை?

### தேர்வுரிமை

இந்தப் பொருளாதார அமைப்பின் கீழ் பொருட்களை அவற்றின் கேள்விக்கேற்ப, சுதந்திரமாக உற்பத்தி செய்யும் வழக்கு உண்டு, விதைகளை உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் (தங்கள் நிலைமைகள், பிரச்சினைகளுக்கேற்றவாறு நிர்ணயித்துக் கொள்கின்ற முறைமை உண்டு. இந்த முறைமையின் கீழ் வாங்குவோருக்கும் விற்போருக்கும் தேர்வுரிமையுண்டு. (விரும்பியதை வாங்கலாம் விற்கலாம்)

சோஷலிஸ முறைமையின் கீழ் இயங்கும் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் இத்தகைய சந்தைப் பொருளாதாரத்துக்கு இடமில்லை.

### சோஷலிஸ அமைப்பினுள் சந்தைப் பொருளாதாரம்?

ஆனால் இன்று சோவியத் ஒன்றியத்தில் சந்தைப் பொருளாதாரத்துக்கான கோஷம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ''நமக்குச் சந்தைப் பொருளாதாரம் வேண்டுமென்ற கருத்தொருமைப்பாட்டு நிலைக்கு நாம் வந்துள்ளோம்'' என்று கொர்பச்சேவ் கூறியுள்ளார்.

கொர்பச்சேவின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பிதாவான பேராசிரியர் ஸ்ரனிஸ்லாவ் ஷற்றலின் கூறுவது மிக மிக முக்கியமானதாகும்.

எமது அரசியல் விமர்சகர்
கூ. மா. இராசையா

''நாம் மனந்திறந்து பேசுவோமே தூய திட்டமிடப்பட்ட பொருளாதாரம், அது வேண்டிய திறமையையும் தரத்தையும் நிச்சயப்படுத்துவதில்லை. அத்தோடு அது அடிக்கடி மாறும் சமூகத் தேவைகளுக்கேற்ப எல்லா வேளைகளிலும் இயைந்து போகும் தன்மையையும் கொண்டதல்ல. ஆகையால் சந்தை உத்திகள் கொண்டுவரப்படவே வேண்டும்'' என்று கூறும் அவர் ''இப்படிச் சொல்வதன் காரணமாக நமது சோஷலிஸம் சந்தை முறைமைச் சோஷலிஸம்'' Market Socia

மன்னார்த்தீவில் மீன் மிக மலிவான விலையில் விற்கப்படுகிறது சனத்தொகை குறைவு. பெருமளவில் மீன் பிடிக்கப்படுதல் அசியன காரணமாகவே மீனின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ முரல் மீன் ஐந்து ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. தாழ்வுப் பாடில் கரை வலை மூலம் பெருமளவு மீன் பிடிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## 100 மைல் சைக்கிள் பயணம்

மன்னாரில் கடமையாற்றும் யாழ் அரச ஊழியர்கள் சுமார் நூறு மைல் சைக்கிள் பயணத்தின் பின்பே மன்னாரை அடைய வேண்டி உள்ளது.

முன்பு திருக்கேதீஸ்வரத்தில் இருந்து பள்ளி முனைக்குப் படகுகளால் சென்றனர். தற்போது கண்டல் சந்தியில் இருந்து அடம்பன், உயிலங்குளம், நானாட்டான் சென்று வங்காலை ஊடாகச் செல்கிறார்கள்.

## நகர்ப்பகுதியில் கொள்ளை

மன்னார் நகர்ப்பகுதியில் தனியார் வீடுகள் உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

அதே போன்று அரச அலுவலகங்களும், அரச ஊழியர்களின் விடுதிகளும் உடைக்கப்பட்டுப் பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்களில் பெறுமதி மிக்க பொருட்களுடன், எழுதும் தாள்கள், பேனாக்கள் போன்றவை கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன. மன்னார்க் கச்சேரியில் உள்ள றைக் கோட்றூமிலும் பல பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

## குரூஸ் நியமனம்

மன்னார்க் கச்சேரி தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சீ எம் குரூஸ் தற்போது மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

## சோதனையின் பின்னரே நகருக்குள் அனுமதி

மன்னார் நகரப் பகுதிக்கு வருபவர்கள் சோதனையின் பின்பே அனுமதிக்கப்படுகிறார்கள்.

சாவற்கட்டுக் குடியேற்றத் திட்டப்பகுதியிலும், பீ. எம்.சி. கட்டிடத்திலும் சோதனை நிலையங்கள் உண்டு. எருக்கலம்பிட்டி ஐந்தாம் கட்டையில் உள்ள இராணுவ முகாமிலும் சோதிக்கப்படுகிறார்கள்.

## இவர்கள் யார்?

மன்னார் நகர்ப்பகுதியிலும் 5 ஆம் கட்டைப் பகுதியிலும் சரளமாகத் தமிழ் பேசும் இளைஞர்கள் காணப்படுகிறார்கள். இவர்கள் சீருடையினரோடு சேர்ந்து காணப்படுகிறார்கள் இப்பகுதித் தமிழ் மக்களுக்குத் தம்மைத் தெரிந்தவர்களென அறிமுகப்படுத்துகிறார்களாம்.

## மன்னாரில் மா தாராளம்

மன்னார் நகரப் பகுதியில் ஒரு இறாத்தல் பாண் ஆறு ரூபாவற்கு விற்பனையாகிறது. மா தாராளமாகக் கிடைப்பதே இதற்குக் காரணம் இங்கு தனி நபருக்கென உலர் உணவு விநியோகத்தின் போது மூன்று கிலோ மா வழங்கப்படுவதும்குறிப்பிடத்தக்கது. (17)

காங்கேசன்சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் டிசம்பர் மாத சம்பளத்திற்கான காசோலைகள் கடந்த 23 ம் திகதியில் இருந்து சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன

காசோலைகளைப் பெற்றுக் கொள்ளாத ஊழியர்கள் நாவலர் வீதியில் உள்ள சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தற்காலிக காரியாலயத்தில் இவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுளளது. காசோலைகள் நேரடியாக வரும் ஊழியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ப.10)

## விலைப்பட்டியல் அவசியம்

தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள சகல தனியார் கடைகளிலும் விற்கப்படும் பொருட்களுக்கான விலைப்பட்டியலை பொதுமக்களின் பார்வைக்கு தொங்க விடுமாறு பணிக்கப்பட்டுள்ளது

தெல்லிப்பழை மக்கள் முன்னணியின் பிரதேசப் பொறுப்பாளர் கடை உரிமையாளர்களுக்கும் இது தொடர்பாக அறிவித்தல் விடுத்துள்ளனர். (ப- 10)

இயைந்து போகும் தன்மையையும் கொண்டதல்ல. ஆகையால் சந்தை உத்திகள் கொண்டுவரப்படவே வேண்டும்'' என்று கூறும் அவர் ''இப்படிச் சொல்வதன் காரணமாக நமது சோஷலிஸம் சந்தை முறைமைச் சோஷலிஸம்'' Market Socialism) ஆகிவிட்டது. ''சந்தை முறைச் சோஷலிஸம்'' எனில் நாட்டின் எல்லாவளங்களும் சந்தை மூலம் மாத்திரமே விநியோகிக்கப்படுவதாகும. அது தான் நிலைமையாகின் (நமது) அரசியல் முறைமை. சோஷலிஸ இயல்புகளைக் கொண்டதாக இராது. நல்லதோ கெட்டதோ முதலாளித்துவம் தான் இருக்கும் சோஷலிஸ அமைப்பினுள சந்தையமைப்பைக் கொண்டு வர விரும்பும் அவர், இது பற்றிக் கூறுவன மிக முக்கியமானதொரு சந்தை முறையை சோஷலிஸ அமைப்புக்குள் விஸ்தரிப்பதையே தமது தளமாகக் கொள்ளும் அவர் கூற்று விவாதிககப்படக் கூடிய ஒன்றாகும் (Reform A New Economic Mechanism - Moscow 1987)

## இலட்சிய முறைமை உடைகின்றது

73 வருடமாகப் போற்றி வந்ததோர் இலட்சிய முறைமை உடைகின்றது என்பது தெட்டத்தெளிவாகின்றது கொர்பச்சேவே கூறியுள்ளார், ''நமது அமைப்பு (system) வேலை செய்ய வில்லை. உண்மையில் அந்த அமைப்பு இப்பொழுது இல்லை. அது இல்லாமலே போய் விட்டது''.

அமைப்பின் போதாமை, இயலாமை காரணமாக நல்ல சாகுப்படியிருந்தும் அதைப் பேணி விநியோகிக்க முடியவில்லை. அத்தியாவசிய உணவுப பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. வரும் குளிர் மாதங்களில் (ஜனவரி, பெப்ரவரி) ரஷ்யாவுக்கு வேண்டிய கோதுமையைக் கொடுக்க, இணைந்த ஜேர்மனி இசைந்துள்ளது கைத்தொழிற் பொருட்கள் போதுமான அளவு இல்லை. அத்துறையிலும் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது.

என்ன நடந்தது? உலகத்தின் இலட்சியக் கனவுகள் நனவாக மாற்றப்படும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்ட நாட்டில் இன்று சோஷலிஸத்தை நிராகரிக்கும் சந்தைப் பொருளாதாரமும், ஜேர்மனிபிடம் உதவி கேட்க வேண்டிய உணவு நிலையும் ஏன், எவ்வாறு வந்தன?

அந்தக்கதை முக்கியமானது

(தொடரும்)

காண்டீபன் நினைவுக் கூட்டத்தில் யோகி:

# திட்டமிட்ட அடிப்படையில் தமிழருக்கு எதிராக பொருளாதாரத் தடையும், இனப்படுகொலையும்

ஒருபுறம் இனப்படுகொலை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மறுபுறம் திட்டமிட்ட அடிப்படையில் பொருளாதாரத்தடையை அமுல் செய்து அரசு தமிழ் மக்களைக் கொன்று வருகிறது. இவ்வாறு யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற லெப். காண்டீபன் (ஸ்ரீஸ்கந்தராஜா, முல்லைத்தீவு) 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகரட்ணம் யோகி குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் அரசு மாதா மாதம் 2000 தொன் உணவுப் பொருளை அனுப்பி விட்டு வடக்கிற் போதிய உணவு அனுப்புவதாக பிரச்சாரம் செய்கிறது.

ஆனால் வடக்கிற்கு உணவு போவதை தடுப்பதற்காக எவ்வித காரணமுமின்றி வவுனியாவில் அடிக்கடி ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுகின்றது.

உணவு உற்பத்தியை வடக்கில் தடுப்பதற்காக உரம் கொண்டுவருவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மழை பெய்யும் போது மண்எண்ணெயை இங்கு கொண்டுவர அனுமதிக்கிறார்கள். மழையின்றி பயிர்கள் வாடும்போது நீரிறைக்க வேண்டிய தேவை ஏற்படும் போது மண்எண்ணெயைக் கொண்டுவர அனுமதி மறுக்கிறார்கள். அரசு எவ்வாறு தந்திரமாக திட்டமிட்ட அடிப்படையில் தமிழர்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தாத பொருளாதாரத் தடையை அமுல் செய்கிறது என்பதற்கு இது நல்ல உதாரணம்.

சாதாரணமாக ஏற்படும் பட்டினி நிகழ்வுகள் உலக நாடுகளில் பெரிதுபடுத்திக் காட்டப்பட்டு பல தொண்டர் நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுகின்றன

ஆனால் தமிழீழத்தில் பல மாதமாக பட்டினியால் பலர் இறந்தும், மேலும் பலர் குற்றுயிராக இருக்கும் நிலை பற்றி தட்டிக் கேட்க எவருமேயில்லை உலக சுதாதார நிறுவனங்கள்கூட கர்ப்பிணித் தாய்மார்கள் மருத்துவம் இன்றி இறப்பது பற்றியோ குழந்தைகள் போஷாக்கின்றி பாதிப்பது பற்றியோ சுட்டிக் காட்டவோ இல்லை. (74)

## உலக அரங்கில்

### கொர்பச்சேவ்விற்கு கூடிய அதிகாரம்

சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ்விற்கு கூடிய அதிகாரம் வழங்குவதற்கான தீர்மானம் நேற்று பலநாள் விவாதத்தின் பின் சோவியற் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இதன் மூலம் சோவியத்தின் முன்னைய எந்த ஜனாதிபதிகளுக்கும் இல்லாத அதிகாரம் கொர்பச்சேவ்விற்கு கிடைத்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி கொர்பச்சேவ், பதவி விலகப்போவதாக கூறிய எட்வெட் ஷேவர் நாட்ஸேயை தொடர்ந்து பதவியில் இருக்குமாறு கேட்டுள்ளார். தனது பெரஸ்ட்ரோய்க்கா திட்டத்திற்கு ஷேவர்நாட்ஸே தொடர்ந்து இருந்து உதவி வழங்கவேண்டும் என கொர்பச்சேவ் கேட்டுள்ளார்.

கொர்பச்சேவிற்கு அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டதையடுத்து பிரதமர் நிக்கலாய் ரிஸ்கோவ் இன் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரிஸ்கோவ் (61) நேற்று முன்தினம் இரவு இருதய நோயினால் பீடிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

### இஸ்ரேல் ராணுவம் தயார் நிலையில்

வளைகுடாவில் போர் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவருவதால் இஸ்ரேலிய ராணுவம் உஷார்படுத்தப்பட்டு வருவதாக இஸ்ரேலிய பிரதமர் இட்ஸாக் ஷமீர் தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய விமானப்படை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள அதே சமயம் ராணுவம் ஜோர்தான் எல்லையை நோக்கி நகர்த்தப்பட்டுவருகிறது ஈராக்கிய ராணுவம் ஜோர்தான் ஊடாகவே தாக்குதலை இஸ்ரேல் மீது ஆரம்பிக்கலாம் என எதிர்பார்ப்பதினாலேயே இந்த நடவடிக்கை.

இதேவேளை ஜோர்தான் எல்லைப்பகுதியில் ஈராக்கின் நடமாடும் ஏவுகணைத்தளங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு ஆய்வு நிலையம் எச்சரித்துள்ளது.

### சூரினாமில்மூன்றுமாதத்தில்தேர்தல் என ராணுவ ஆட்சியாளர் அறிவிப்பு

தென் அமெரிக்க நாடான சூரினாமில் இன்னும் மூன்று மாதங்களில் தேர்தல் நடைபெறும் என இரு தினங்களுக்கு முன்னர் ராணுவ சதிப்புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றிய ராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். சூரினாமின் அரசியல் சட்ட அமைப்பை தாம் மதித்து நடப்பதாகவும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 33 புளொட் ..

வித்தார்.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை மாலைதீவு அரசினால் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

1988 நவம்பரில் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூமின் அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் இடம் பெற்ற இச்சதி முயற்சியில் ஈடுபட்ட அறுபத்தெட்டு 'புளொட்' உறுப்பினர்களை இந்தியப்படையினர் கைது செய்தனர்.

இரு அரசுகளுக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து சாதாரண குற்றவாளிகளான 33 பேர் மீதே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சதிமுயற்சிக்குத் தலைமை வகித்த 12 தமிழர்களுக்கும் 4 மாலைதீவு வாசிகளுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது எஞ்சிய 'புளொட்' உறுப்பினர்கள் மாலைதீவில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

### மிதிவெடியை...

இராணுவம் பயணிகளை வயல் வரம்புகளில் நடக்குமாறு பணித்ததாகவும் இதனையடுத்து அவர்கள் இவ்வாறு சென்ற போது மிதிவெடியில் சிக்கினர் (70)

### இந்தியா...

### சார்க் ..

சதியாளர் முயற்சி மேற்கொண்ட போதிலும் அம்முயற்சியை மாலைதீவுப் படைகள் முறியடித்து விட்டதாக அவர் கூறினார். எனினும் சதியாளர் யார் என்பதை அவர் கூறவில்லை

### கப்பலிருந்து ..

கொண்டு வந்து சேர்க்க வேண்டியுள்ளது.

இதனால் நேற்று முன்தினம் பொருட்களை ஏற்றச் சென்ற பல நோ. கூ. சங்க லொறிகள் இன்னமும் திருப்பிவர முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

சுமார் 300 க்கும் அதிகமான லொறிலோட் பொருட்களில் இதுவரை 100 லோட் பொருட்களே இறக்கப்பட்டுள்ளதாகவும்கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (66

### கொழும்பில்...

விக்கப்படுகிறது.

கொரியாவிற்கான இலங்

## கிறிஸ்து பிறப்பு சிந்தனை — 5

### இயேசு அனைவருக்கும் இயேசு

— சுவாமி ஜீவா போல்

இயேசு பாலனை வணங்க மூன்று அரசர்கள் அல்லது ஞானிகள் சென்றார்களே. இந்நிகழ்ச்சியை திருக்காட்சி விழா என்று கத்தோலிக்கர் தைமாத முதல் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவர். கீழைத்தேய மக்களின் கிறிஸ்மஸ் என்றும் கருதக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது இந்த விழா. பொன், தூபம், வெள்ளைப் போளம் என்னும் மூன்று பரிசில்கள் வழங்கியதால் மூன்று — ஞானிகள் என்று பெயர் பெற்று, அவர்கள் பாரம்பரியத்தில் கஸ்பார், மெல்கியோர், பலத்தசார் எனவும் அறியப்படுகின்றனர். கொடுக்கப்பட்ட மூன்று அன்பளிப்பும் பிள்ளையினதும், தாயினதும் பராமரிப்புக்கும், சுகத்திற்கும் சாதாரணமாய் வழங்கும் நன்கொடைகள்தான். ஆயினும் மக்கள் காலாகாலமாய்க் காத்திருந்த மெசியாவன் பண்புகளுக்கும் அவை அறிகுறியாய் விளங்கின.

பொன் — கிறிஸ்துவின் மாட்சிமை (அரசத்துவம்): தூபம் — குருத்துவ வாழ்வு (தேவத்துவம்): வெள்ளை போளம் — பாடுகள், மரணம் (மனிதத்துவம்); இவை போன்ற அறிகுறிகள் இயேசு உண்மையான மீட்பர் என முன் அறிவித்தன. வணங்க வந்த மூன்று ஞானிகளும் கீழ்த்திசையிலிருந்து வந்தது இன்னும் பல செய்தி சொன்னது. தாம் கண்ட உண்மைக் கடவுளை நோக்கி வேற்று நாட்டு மக்களும் வருவார் என்ற தணியாத நம்பிக்கை யூத மக்களுக்கு இருந்தது. யூதரல்லாதவர் வந்தார்கள, அவர்களும் தாம் நம்பிய வானசாஸ்திர உதவிகொண்டு வந்தார்கள். ஆனால் யூத பரம்பரையில் பிறந்த ஏரோதும் அவன் சதிக்கும்பலும் மெசியாவைக் காண மறுத்தது மட்டுமல்ல ஏனையவருக்கும் தடைக் கல்லாகவும் இருந்தனர்.

உண்மையில் இறைமகன் இயேசுவை ஒரு குறிப்பிட்ட இனமோ, கலாசாரமோ சிறைப்பிடித்து விட முடியாது. இறைவன் அனைத்தையும் கடந்தவர். அவருக்குத் தடைகள் இல்லை. இனம், மதம், மொழி, கலாசாரங்கள் பல உண்டு அவை இறை மாட்சியின் பன்முகங்கள். இவற்றில் வெறி கொண்டவர் ஆண்டவனையே கொல்லத் தேடும் ஏரோதுக்களாக தம்மையே அழித்துக்கொள்வர் உண்மைக் கிறிஸ்தவர் இனம், மொழி, சாதி, சமயம் என்னும் வேலிகளைக் கடந்து அதாவது பேதங்கள், பிரிவனைகள் இன்றி வாழ அழைக்கப்பட்டவர். வேதங்கள் பேதங்களை வளர்க்கக்கூடாது. இறைவன் அனைவர்க்கும் இறைவன் இயேசு அனைவர்க்கும் இயேசு.

## யாழ் கேரதீவு பயணத்துக்கு 2000 ரூபா கட்டணம்

தமிழ்ப் பயணிகள் சிலர் செல்ல அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிலர் கொழும்பு செல்லும் நோக்கமாக தனியார் வாகனங்களில் சென்று சேரதீவுடன் திரும்பி வந்ததை யாழ் முத்திரைச் சந்தையில் காண முடிந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைபபயன்படுத்தி சில வாகனச் சாரதிகள் சேரதீவில் கொண்டு சென்று விடுவதற்கு 1000 ரூபாவும், சேரதீவில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு 1000ரூபா அறவிடுகின்றன(33)

### வவுனியா பூந்தோட்டத்தில்...

வவுனியா பூந்தோட்டத்தில் மிதிவெடியில் சிக்கி காயமடைந்ததால் வவுனியா

### பணலாறில்...

யாளர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுடடுக்கொல்லப்பட்ட கப்டன் அடேரட்ன விடமிருந்து பிறவுனிங் பிஸ்டல் மகஸின், ரவைகள் என்டன புலிகளால் மீட்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னர் ராணுவ சதிப்புரட்சி மூலம் ஆ... ராணுவ ஆடசியாளர்கள் அறிவித்துள்ளனர். சூரினாமின் அரசியல் சட்ட அமைப்பை தாம் மதித்து நடபபதாகவும் ராணுவம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஆட்சியில் இருந்து இறக்கப்பட்ட ஜனாதிபதி ரம்பாக்கை விடுவித்துவிடடதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எட்டு வருட ராணுவ ஆட்சியின் பின்னர் கடந்த 82-ம் ஆண்டிலேயே ஜனநாயகத் தேர்தல் மூலம் ஜனாதிபதி ரம்பாக் ஆட்சிபீடம் ஏறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அல்பேனியா, கொங்கோவிலும் நத்தார் கொண்டாட்டங்கள்

ஐரோப்பாவில் கம்யூனிச ஆட்சி தற்போது நடைபெறும் அல்பேனியாவில் மதச் சுதந்திரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நத்தார் கொண்டாட்டங்கள் அங்கு பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவிலும் நேற்று நத்தார் கொண்டாட்டங்கள் வெகு உற்சாகமாக கொண்டாடப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சீக்கிய தீவிரவாதிகளின் மிரட்டலுக்குப் பணிந்த 'தூரதர்ஷன்'

சீக்கிய தீவிரவாதிகளின் மிரட்டலையடுத்து இந்திய தொலைக்காட்சியில் சீக்கிய தீவிரவாதிகள் என்ற பதம் பாவிப்பது கைவிடப்பட்டுள்ளது. சீக்கிய ஆயுதபாணிகள் என்ற பதமே அடிக்கடி செய்தி அறிக்கையில் பாவிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஹரியானாவில் சீக்கிய தீவிரவாதிகளுக்கு எதிரான செய்திகளை ஒலிபரப்பியதற்காக மாநில வானொலி நிலைய பணிப்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற் (லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 27-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

மிதிவெடியில் சிக்கினர் (70)

### இந்திய...

தவிர விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது அல்ல. இலங்கைத் தமிழர் பிரச்சினையின் அணுகுமுறையில் அரசுக்கு மாறுதல் இல்லை'' என்றும் அவர் மேலும் சொன்னார்.

''மாநிலத்தில் புலிகளின் ஆதிக்கம் பற்றி மாநில அரசும் கடலோரப் பகுதி மக்களும் தான் உண்மையைத் தெரிவிக்க வேண்டும். மாநில அரசு கேட்டுக் கொண்டபடி எல்லையோரக் காவல்படை மத்திய றிசேவ் பொலிஸ் படைப் பிரிவுகள் அனுப்பப்படும். ஆனால் கேட்ட அளவுக்குக் கிடைப்பது கடினம்:' என்றும் பிரதமர் கூறினார்.

### இரு தமிழ்..

நிறுவன மதிப்பீட்டுக்குழு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் இந்த இனரீதியான நடவடிக்கைகளை எதிர்த்து புனர்வாழ்வுப் பிரிவின் பிரதான கணக்காளரும் ராஜினாமாச் செய்துள்ளதாகவும் மேலும் பலர் ராஜினாமாச் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### கொழும்பில்...

விக்கப்படுகிறது.

கொரியாவற்கான இலங்கைத்தூதுவர் கொடித்துவக்கு இந்நிறுவனங்களின் பணிப்பாளர்களுடன் இலங்கையில் முதலீடு வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டுநாயக்க சுதந்திரவர்த்தக வலையத்தில் தென் கொரிய நிறுவனங்களே அதிகமான அளவில் முதலீடு செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது

### ஐ. தே. க...

ஒழுங்காக வேலை செய்யாத அமைச்சர்களுக்கு தாம் ஒரு வருட தவணை கொடுப்பதாகவும் அவர்கள் திருந்தாவிட்டால் அவர்களைத் தாம் பதவியில் இருந்து நீக்கவிருப்பதாகவும் பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்பட்டால் தற்போதைய மந்திரி சபையின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

தமிழ்க்குழு வொன்றைச் சேர்ந்த எம். பி. ஒருவரை அமைச்சரவையில் சேர்க்கும் முயற்சியில் சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவர் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றது.

# காலமானார்

## சங்கரப்பிள்ளை கதிரவேலு

(இளைப்பாறிய தபால் திணைக்கள உத்தியோகத்தர்)
நீலிப்பந்தனை, காரைநகர்.

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கதிரவேலு (இளைப்பாறிய தபால் திணைக்கள உத்தியோகத்தர்) காலமானார். அன்னார் சின்னாச்சிப்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், ஸ்ரீகரன் (கிராம சேவை அலுவலர்) ஸ்ரீரஞ்சனா (போதனாசிரியர், கிராம அபிவிருத்தித் திணைக்களம்), ஸ்ரீசங்கரதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனும் கோகுலராணி (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரி), சிவகுமரன் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்திபனின் அன்புப் பேரனும் திருமதி. மங்கையர்க்கரசி முருகேசு, காலஞ்சென்ற திருமதி. பாக்கியம் கதிர்காமத்தம்பி, காலஞ்சென்ற வைரமுத்து, காலஞ்சென்ற திருமதி. சொர்ணம் விஜயதர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில 27. 12. 90 வியாழக்கிழமை இன்று காலை 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்திற்கு தகனக் கிரியைகளிற்காக எடுத்துச் செல்லப்படும்.

நீலிப்பந்தனை,
காரைநகர்.

தகவல்: க. ஸ்ரீகரன்
(கிராம சேவை அலுவலர்,
வட்டு. மேற்கு.)

12177